செ.வெ.எண். 34 நாள் : 12-09-2017

# தொழில் முனைவோர் அடையாள அட்டை

## பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, மாவட்ட வணிக வளாகம், கிராம வணிக வளாகம் மற்றும் மதி விற்பனை அங்காடிகளும் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட அங்காடி மட்டுமின்றி கல்லூரிச் சந்தைகள், மாவட்ட அளவிலான கண்காட்சிகள், மாநில அளவிலான கண்காட்சிகள் மற்றும் தேசிய அளவிலான கண்காட்சிகள் போன்ற பல்வேறு வாய்ப்புகள் ஏற்படுத்தி மாவட்டத்தில் ஒரு சில குழு உறுப்பினர்களே பயன்படுத்தி வருவதாகவும், ஒவ்வொரு மகளிர் தொழில் முனைவோரும் அவர்கள் ஏதேனும் பொருட்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்பவராயின் அவர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படுவதுடன் (வணிக வளாகங்கள், கல்லூரிச் சந்தைகள் மற்றும் கண்காட்சிகள் ஆகியவற்றில் பங்கேற்க அனுமதித்தல்) உதவிகள் வழங்கிட திட்டமிடப்பட்டு உள்ளது.

**அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பது எப்படி?**

தொழில் முனைவோர் அடையாள அட்டை மற்றும் சுய தொழில் சார்ந்த பயிற்சிகளை பெற விரும்பும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலகம் அல்லது மகளிர் திட்ட அலுவலகத்தை அணுகி உரிய விண்ணப்பத்தை பெற்று கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், திட்ட இயக்குநர், மகளிர் திட்டம், காவல் ஆணையர் அலுவலக பழைய கட்டிடம், முதல் தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கொக்கிரகுளம், திருநெல்வேலி என்ற முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பம் சமர்ப்பிக்க 15.09.2017 கடைசி நாளாகும். தொலைபேசி எண் - 0462 - 2500302.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருநெல்வேலி.

நா.ஒ.
1.9.17 1.9.17 1.9.17 1.9.17

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.